**வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்**
**ந.க.எண்.2191/ஆ5/2023, நாள். 26.05.2023**

•••••

பொருள் பள்ளிக் கல்வி – 2023–2024ம் கல்வியாண்டில் 07.06.2023 அன்று பள்ளிகள் திறக்கப்பட உள்ளதால் – பள்ளிகளில் செய்யப்பட்டுள்ள முன்னேற்பாடுகளை 02.06.2023 அன்று பள்ளிகளை ஆய்வு செய்யும் பொருட்டு இணைப்பில் உள்ள பள்ளி தலைமையாசிரியர்கள் நியமனம் செய்தல் – தொடர்பாக

•••••

கோடை விடுமுறை முடிந்து 2023–2024ம் கல்வியாண்டில் 07.06.2023ம் தேதியன்று அனைத்து வகை பள்ளிகளும் திறக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே அனைத்து அரசு உயர் / மேல்நிலைப் பள்ளிகளில் செய்யப்பட்டுளள் முன்னேற்பாடுகளை ஆய்வு செய்யும் பொருட்டு இணைப்பில் உள்ள பள்ளித் தலைமையாசிரியர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

நியமனம் செய்யப்பட்டுள்ள பள்ளி தலைமையாசிரியர்கள் 02.06.2023 அன்று தங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள பள்ளிகளை பார்வையிட்டு அதன் விவரங்கள் இணைப்பில் உள்ள சரிபார்ப்பு படிவத்தின் படி சரியாக பூர்த்தி செய்யப்பட்டுள்ளதா என ஆய்வு செய்து சார்ந்த பள்ளி தலைமையாசிரியரின் கையொப்பத்துடன் மாவட்டக் கல்வி அலுவலகத்தில் (இடைநிலைக் கல்வி) 03.06.2023 அன்று பிற்பகல் 3.00 மணிக்குள் அ5 பிரிவில் நேரில் ஒப்படைக்குமாறு தெரிவிக்கப்படுகிறது. வேலூர் மாவட்டக் கல்வி அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்ட சரிபார்ப்பு படிவங்களை தொகுத்து 05.06.2023 அன்று மாலை 4.00 மணிக்குள் இவ்வலுவலகத்தில் தனிநபர் மூலம் ஒப்படைக்குமாறு மாவட்டக் கல்வி அலுவலர் (இடைநிலைக் கல்வி) கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

இணைப்பு:

1. சரிபார்ப்பு படிவம்
2. ஆய்வு பணி மேற்கொள்ளும் பட்டியல்

//ஒப்பம்//
முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

பெறுநர் –
சார்ந்த பள்ளி தலைமையாசிரியர்,
அரசு உயர்/ மேல்நிலைப் பள்ளிகள்,
வேலூர் மாவட்டம்.
(இவ்வலுவலக இணையதளம் மூலமாக)

நகல்:
மாவட்டகல்விஅலுவலர்
வேலூர். (தொடர் நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு )
(இவ்வலுவலக மின்னஞ்சல் மூலமாக அனுப்பப்படுகிறது)